




# Kamarajar Social Service





**Kamarajar social service**

**Kalladikuppam.**

**Email: vinayag105@gmail.com**

www.kamarajarsocialservice.yolasite.com

## பகத்சிங்

**நம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட பகத்சிங் பற்றி உங்களுக்குத் தெரியும். ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியதால் அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.**
**தூக்கிலிடுவதற்கு முன் ஏதாவது சொல்ல விரும்பினால் சொல்லலாம் என்று அவருக்கு அனுமதி கொடுத்தது ஆங்கிலேய அரசு.**
**தாம் இறப்பது பற்றி பகத்சிங் வருந்தவில்லை. ஆனால், தன்னை ஒரு குற்றவாளியாக நினைத்துத் தூக்கில் போடுவதை அவர் விரும்பவில்லை. அதற்குப் பதிலாகத் தன்னை ஒரு எதிரியாகக் கருதிச் சுட்டுக் கொல்லவேண்டும் என்று தன்னுடைய இறுதி விருப்பத்தைத் தெரிவித்தார்.**
**""நீ எப்படியும் இறக்கத்தான் போகிறாய்... உன்னை எப்படிக் கொன்றால் என்ன?" என்று அலட்சியமாகக் கேட்டனர் ஆங்கிலேய அதிகாரிகள்.**
**அதற்கு பகத்சிங், ""தூக்கிலிடும்போது, என் கால்கள் என்னுடைய தாய்மண்ணைத் தொடமுடியாத உயரத்தில் இருக்கும். ஆனால் துப்பாக்கியில் சுடும்போது என்னுடைய தாய்மண்ணைத் தழுவியபடியே உயிர்விடுவேன். அதுதான் எனக்குப் பெருமை!" என்று கூறினாராம்**

**படைப்பாளிகளின் கவனத்திற்கு...**

இணையதளத்திற்கு தங்களது படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: vinayag105@gmail.com வேறு எந்த இணைய தளத்திலோ, வலைப்பூக்களிலோ வெளிவராத படைப்புகளை மட்டுமே அனுப்பவும். அப்படியான படைப்புகள் மட்டுமே வெளியிடப்படும்